1979 பிப்ரவரி 15]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(இ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, இதை நான் எதிர்க்கிறேன்.

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இச்சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

(முற்பகல் 9.20)

5. ஒழுங்குப் பிரச்சினை

மேலவையில் முதலமைச்சர் குறிப்பிட்ட தகவல் குறித்து

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார். உங்கள் அனுமதியோடு ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மேலவையில் முதல் அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது வன்முறை சம்பவங்கள் எதிர்க் கட்சித் தலைவர் மீது நடைபெற்ற போது அவரோடு தொலை பேசியில் தொடர்பு கொண்டு பேசிய தாகக் குறிப்பிட்டார்கள். சம்பந்தப்பட்ட எதிர்க் கட்சித் தலைவர் அப்படிப் பேசவில்லை என்று மறுப்புத் தெரிவித்து இருக்கிறார். ஆகவே, இது முக்கியமான பிரச்னை. எதிர்க் கட்சித் தலைவரின் பாதுகாப்பு பற்றிய பிரச்னை. ஆகவே, இதில் உண்மை என்ன என்பது குறித்து அரசு அறிக்கை அளிக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் பேசியது, அதற்கு எதிர்க் கட்சித் தலைவர் மறுப்புத் தெரிவித்தது ஆகியவை விவாதத்தின் போது சொல்லலாமே தவிர, ஒழுங்குப் பிரச்னை என்ற முறையில் இங்கே கொண்டு வருவது சரியல்ல.

திரு. அ. ரகுமான்கான்: உண்மை நிலைமை என்ன என்பது குறித்து விவாதம் செய்வது தனியாக இருந்தாலும், அரசு இது குறித்து ஒரு அறிக்கை அளித்தால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் எண்ணத்தைப் புரிந்து கொண்டேன். இன்றும், நாளையும் ஆளுநர் உரை மீது விவாதம் நடக்கிறது. அதில் கலந்து கொண்டு எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர் ஆகியோர் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதற்கு முதலமைச்சரோ அல்லது அவை முன்னவரோ பதில் அளிக்க வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, வெளியே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி குறித்து அவையில் அறிக்கை வைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, நீங்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்னைக்கு அவசியம் இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறேன். இங்கே விவாதம் நடைபெற வாய்ப்பிருந்தாலும் அதற்காக தனியே நேரம் ஒதுக்க முடியாது. ஆகவே, அறிக்கை அளித்தால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள்.

6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்— (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, ஆளுநர் பேருரைக்கு திரு. இரா. முத்தையா முன்மொழிந்துள்ள நன்றி அறிவிப்புத் தீர்மானத்திற்கு வரப்பெற்றுள்ள திருத்தங்கள் முன்மொழியப் பெற்று வழிமொழியப் பெற வேண்டும்.

திரு. எஸ். சிவசாமி : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்,

இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும் :—

(1) மாநிலத்தில் லஞ்ச ஊழல் வளர்ந்து கொண்டு போவதைத் தடுத்து நிறுத்துவது பற்றியும் ;

(2) ஆளும் கட்சிக்காரர்கள் நிர்வாகத்தில் தலையிடுவது பற்றியும் ;

(3) மாநிலத்தில் பல கொலைகள் நடந்து கொண்டிருந்தும், டுத்து நிறுத்த முயற்சிக்காதது பற்றியும் ;